# 1930 ஆம் ஆண்டு

# தமிழ்நாடு சூதாட்டச் சட்டம்

## (தமிழ்நாடு சட்ட எண் III/1930)

19 ஜூன் 1979

(1975 ஆம் ஆண்டு மே மாத முடிவு வரை
திருத்தப்பட்டவாறு)

# THE TAMIL NADU GAMING ACT, 1930

(Tamil Nadu Act III of 1930)

( *As amended up to the end of May*, 1975 )

தமிழாக்கம்:

தமிழ்நாடு சட்டத்துறை ஆட்சிமொழி ஆணையம்
சென்னை

தமிழ்நாடு அரசாங்கத்திற்காகத் தமிழ்நாடு அரசு எழுதுபொருள்
அச்சுத்துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.
1979

# 1930 ஆம் ஆண்டு தமிழ்நாடு சூதாட்டச் சட்டம்

## (தமிழ்நாடு சட்ட எண் III/1930)

பொருளடக்கம்


| பிரிவுகள் | | பக்கம் |
|---|---|---|
| | முகப்பு. .. .. .. | 1 |
| 1. | குறுந்தலைப்பு. .. .. .. | 1 |
| 2. | அளாவுகை. .. .. .. | 1 |
| 3. | இலக்கணங்கள். .. .. .. | 1 |
| 4. | சிலவகைச் சூதாட்டங்களுக்காகத் திறந்து வைத்தல்முதலியவற்றிற்கான தண்டனை. | 3 |
| 4 (அ). | குற்றத்தைப் பற்றிய அனுமானம். .. | 6 |
| 5. | பொதுச் சூதாட்ட விடுதியில் நுழைவதற்குக் கட்டளை அளிக்க அதிகாரம். | 6 |
| 6. | முந்திய பிரிவின்படியான சோதனையில் கண்டுபிடிக்கப்பட்ட ஆட்டச்சீட்டுகள், பகடைக்காய்கள் முதலியவை அந்த இடம் ஒரு பொதுச் சூதாட்ட விடுதி என்பதற்கான சாட்சியமாக இருத்தல். | 7 |
| 7. | பணயப் பொருள் வைத்து ஆடியதாக மெய்ப்பிக்க வேண்டியது அவசியமில்லை. | 7 |
| 8. | பொதுச் சூதாட்ட விடுதியைத் திறந்து வைத்திருத்தல் முதலியவற்றிற்கான தண்டனை. .. .. .. .. | 8 |
| 9. | பொதுச் சூதாட்ட விடுதியில் சூதாடுவதாகக் காணப்படுவதற்குத் தண்டனை. | 8 |
| 10. | தீர்ப்புத் தண்டனையின் பேரில், சூதாட்டக் கருவிகளை அழிக்கும்படி கட்டளையிடலாம். .. .. .. | 8 |
| 11. | திறமை விளையாட்டுகளுக்குக் காப்பு. .. | 9 |

| பிரிவுகள் | | பக்கம் |
|---|---|---|
| 11 (அ). | தகவல் கொடுத்தவர்களுக்கும், காவல் அலுவலர்களுக்கும் அபராதத்தின் பகுதியைக் கொடுத்தல். .. .. .. | 9 |
| 12. | பொதுத்தெரு முதலியவற்றில் சூதாடுவதற்குத் தண்டனை. .. .. | 10 |
| 13. | இந்தச் சட்டத்தின்படியான குற்றங்கள் கைது செய்தற்குரிய குற்றங்களாயிருத்தல். .. .. .. .. .. | 10 |
| 13 (அ). | சாட்சிக்கு ஈட்டுறுதி அளித்தல். .. .. | 10 |
| 14. | நீக்கம். .. .. .. .. .. | 11 |

# 1930 ஆம் ஆண்டு

# தமிழ்நாடு சூதாட்டச் சட்டம்

## (தமிழ்நாடு சட்ட எண் III/1930)

[ஏப்ரல் 8, 1930[

(இந்தச் சட்டம் 1930ஆம் ஆண்டு பிப்ரவரி 23-ல் ஆளுநரின் இசைவையும், 1930 ஆம் ஆண்டு மார்ச் 21-ல் ஆளுநர்-தலைவரின் (கவர்னர்-ஜெனரல்) இசைவையும் பெற்றது; 1930ஆம் ஆண்டு ஏப்ரல் 8-ல் ஃபோர்ட் செயிண்ட் ஜார்ஜ் அரசிதழில் ஆளுநர்–தலைவரின் இசைவு முதன் முதலாக வெளியிடப்பட்டது.)

தமிழ்நாடு மாநிலத்தில் சூதாடுவதற்கும், பொதுச் சூதாட்ட விடுதிகளை வைத்து வருவதற்கும் தண்டனை அளிப்பதற்கு வகை செய்வதற்கான ஒரு சட்டம்.

முகப்பு.—தமிழ்நாடு மாநிலத்தில் சூதாடுவதற்கும், பொதுச் சூதாட்ட விடுதிகளை வைத்து வருவதற்கும் தண்டனை அளிப்பதற்கு வகை செய்வது உகந்ததாயிருப்பதாலும், இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஆளுநர்-தலைவரின் முன் ஒப்பளிப்புப் பெறப்பட்டிருப்பதாலும், இதன்மூலம் பின்வருமாறு சட்டமியற்றப்படுகிறது:—

1. குறுந்தலைப்பு.—இந்தச் சட்டம் 1930 ஆம் ஆண்டு தமிழ்நாடு சூதாட்டச் சட்டம் என்று வழங்கப்பெறும்.

2. அளாவுகை.—1888 ஆம் ஆண்டு சென்னை மாநகர் காவலர் சட்டத்தில் இலக்கணம் கூறப்பட்டுள்ளபடியான சென்னை மாநகரத்தைத் தவிர்த்து, இந்த சட்டம் தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் அளாவி நிற்கும்.

[1] [3. இலக்கணங்கள்.—பொருளிலோ, சூழ்நிலையிலோ முரணானது எதுவும் இருந்தாலன்றி, இந்தச் சட்டத்தில்—

'பொதுச்சூதாட்ட விடுதி' என்பது சூதாட்டக் கருவிகளை அல்லது வீட்டை, அறையை, கூடாரத்தை, அடைப்பினை,

1. 1946ஆம் ஆண்டு தமிழ்நாடு சூதாட்ட (திருத்தம்) சட்டத்தின் 2ஆவது பிரிவினால் பதிலாக அமைக்கப்பட்டது.

வாகனத்தை, கலத்தை அல்லது இடத்தைப் பயன்படுத்துவதற்காக, கட்டண வாயிலாகவேனும் மற்றப்படி எவ்வாறேயாயினும், அத்தகைய வீட்டை, அறையை, கூடாரத்தை, அடைப்பினை, வாகனத்தை, கலத்தை அல்லது இடத்தைச் சொந்தமாகக் கொண்டிருக்கிறவரின், நேரடி அனுபோகத்தில் கொண்டிருப்பவரின், பயன்படுத்துகிறவரின் அல்லது வைத்திருப்பவரின் இலாபத்திற்காகவோ, ஆதாயத்திற்காகவோ, ஆட்டச் சீட்டுகள், பகடைக் காய்கள், மேசைகள் அல்லது மற்றச் சூதாட்டக் கருவிகள் வைத்து வரப்படுகிற அல்லது பயன்படுத்தப்படுகிற ஏதேனும் வீடு, அறை, கூடாரம், அடைப்பு, வாகனம், கலம் அல்லது வேறெந்த இடம் எதுவேயாயினும் என்று பொருள்படும்; மேலும் சூதாடும் நோக்கத்திற்காகத் திறந்துவைக்கப்பட்ட, வைக்கப்பட்ட அல்லது பயன் படுத்தப்பட்ட, அல்லது திறந்துவைக்கப்படுவதற்காகவோ வைக்கப்படுவதற்காகவோ பயன்படுத்தப்படுவதற்காகவோ அனுமதிக்கப்பட்ட வீடு, அறை, கூடாரம், அடைப்பு, வாகனம், கலம் அல்லது இடம் எதனையும் உள்ளடக்கும்;

''சூதாட்டம்'' என்பது அதிருஷ்டச் சீட்டை உள்ளடக்காது. ஆனால், ஒரு குதிரைப்பந்தயத்தின் மீது பணயம் வைத்தல் அல்லது பந்தயம் கட்டுதலானது—

(i) அத்தகைய குதிரைப் பந்தயம் நடத்தப்படவுள்ள தேதியிலும்,

(ii) அத்தகைய பந்தயத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரஆயம், மாநில அரசாங்கத்தின் ஒப்பளிப்போடு அதன் பொருட்டு ஒதுக்கி வைத்துள்ள பந்தய அடைப்பிற்குள் இருக்கும் இடம் ஒன்றிலோ இடங்களிலோ

நடைபெறும்பொழுது அத்தகைய பணயம் வைத்தலை அல்லது பந்தயம் கட்டுதலைத் தவிர, மற்றப் பணயம் வைத்தலை அல்லது பந்தயம் கட்டுதலை உள்ளடக்காது.

இந்த இலக்கணத்தின் நோக்கங்களைப் பொறுத்தமட்டில், பணயம் வைத்தல் அல்லது பந்தயம் கட்டுதலானது பந்தயப் பொருளை வசூலிப்பதையோ, கேட்டுப் பெறுவதையோ, பணயம் அல்லது பந்தயம் எதனையும் பொறுத்துப் பணமாகவோ மற்றப் படியோ வெற்றிப் பொருள்களை அல்லது பரிசுகளைப் பெற்றுக் கொள்வதையோ விநியோகம் செய்தலையோ அல்லது பணயம் வைப்பதற்கு அல்லது பந்தயம் கட்டுவதற்கு, அல்லது அவ்வாறு

வசூலிப்பதற்கு, கேட்டுப் பெறுவதற்கு, பெற்றுக் கொள்ளுவதற்கு அல்லது விநியோகம் செய்வதற்கு உதவும் அல்லது அவற்றிற்கு வசதி செய்யும் கருத்தோடு செய்யப்பட்ட செயல் எதனையுமோ உள்ளடக்குவதாகக் கொள்ளுதல் வேண்டும்.

'சூதாட்டக் கருவிகள்' என்பது சூதாட்டப் பொருளாக அல்லது சூதாடுவதற்கான உபாயமாகப் பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தக் கருதப்பட்ட பொருள் எதையும், சூதாட்டம் எதற்குமான பதிவேடாக, பதிவுக்கட்டாக அல்லது சாட்சியமாகப் பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தக் கருதப்பட்ட பத்திரம் எதையும், சூதாட்டம் எதிலிருந்தும் கிடைக்கும் தொகையையும், சூதாட்டம் எதனையும் பொறுத்து விநியோகம் செய்யப்பட்ட அல்லது விநியோகம் செய்யக் கருதப்பட்ட பணமாகவோ மற்றப்படியாகவோ உள்ள வெற்றிப் பொருட்கள் அல்லது பரிசுகள் எவற்றையும் உள்ளடக்கும்.]

4. சிலவகைச் சூதாட்டங்களுக்காகத் திறந்து வைத்தல் முதலியவற்றிற்கான தண்டனை.—*(1) (அ)* வீடு, அறை, கூடாரம், அடைப்பு, வாகனம், கலம் அல்லது இடம் எதனின் சொந்தக்காரராய் அல்லது அதை நேரடிஅனுபோகத்தில் கொண்டவராய் அல்லது அதைப் பயன்படுத்துபவராய் இருந்து, அதனை,

(i) குதிரைப் பந்தயத்தின் மீது, அல்லது

(ii) பருத்தி, தங்கம் அல்லது வெள்ளிக்கட்டி, அல்லது வேறு பண்டத்தின் சந்தைவிலையின் மீது அல்லது அத்தகைய விலையைக் குறிப்பிடப் பயன்படுத்துகிற எண்ணின் இலக்கங்களின் மீது, அல்லது

(iii) அத்தகைய பண்டம் எதனின் சந்தைவிலைத் தொகையின்மீது அல்லது அதன் மாறுபாட்டின் மீது அல்லது அவ்வாறு மாறுபடுகிற தொகையைக் குறிப்பதற்காகப் பயன் படுத்தப்படுகிற எண்ணிக்கையின் இலக்கங்களின் மீது, அல்லது

(iv) மூலதனப் பங்கு (Stock) அல்லது பங்கு (Share) எதனின் சந்தைவிலையின் மீது அல்லது அத்தகைய விலையைக் குறிக்குங்கால் பயன்படுத்தப்பட்ட எண்ணிக்கையின் இலக்கங்களின் மீது, அல்லது

(v) பொது இடத்தைப் பயன்படுத்துகிற மோட்டார் வண்டி ஏதொன்றின் பதிவு எண்ணின்மீது அல்லது பதிவு எண்ணின் இலக்கங்களின்மீது, அல்லது

(vi) எந்தப் பணய அல்லது பந்தய நடவடிக்கை அல்லது திட்டம் ஒன்றில் பணமாகவோ மற்றப்படியாகவோ உள்ள வெற்றிப் பொருட்களை அல்லது பரிசுகளைப் பெறுவது அல்லது விநியோகம் செய்வது அதிர்ஷ்டத்தைப் பொறுத்ததாக ஆக்கப்படுகிறதோ, அந்தப் பணய அல்லது பந்தய நடவடிக்கை அல்லது திட்டத்தின் மீது

சூதாடும் நோக்கத்திற்காகத் திறந்து வைத்திருக்கிற, வைத்திருக்கிற அல்லது பயன்படுத்துகிற, அல்லது

(ஆ) அத்தகைய வீடு, அறை, கூடாரம், அடைப்பு, வாகனம், கலம் அல்லது இடம் எதனின் சொந்தக்காரராய் அல்லது அதனை நேரடிஅனுபோகத்தில் கொண்டவராய் இருந்து, முன் சொல்லப்பட்ட பொருட்களில் எதன்மீதும் சூதாடும் பொருட்டு, அறிந்தோ அல்லது வேண்டுமென்றோ, வேறு ஆள் எவரையும் அதனைத் திறந்துவைக்க, நேரடிஅனுபோகத்தில் கொள்ள, வைத்துக்கொள்ள அல்லது பயன்படுத்த அனுமதிக்கிற, அல்லது

(இ) முன்சொல்லப்பட்ட பொருட்கள் எதன்மீதும் சூதாடும் பொருட்டுத் திறந்து வைக்கப்பட்ட, நேரடிஅனுபோகத்தில் கொள்ளப்பட்ட, வைக்கப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்ட அத்தகைய வீடு, அறை, கூடாரம், அடைப்பு, வாகனம், கலம் அல்லது இடம் எதனையும் கவனித்துக்கொள்கிற அல்லது மேலாண்மை செய்கிற அல்லது அதில் வியாபாரம் நடத்துவதற்கு எந்த முறையிலும் உதவுகிற, அல்லது

(ஈ) முன்சொல்லப்பட்ட பொருட்கள் எதன்மீதும் சூதாடும் பொருட்டு அத்தகைய வீட்டிற்கு, அறைக்கு, கூடாரத்திற்கு, அடைப்புக்கு, வாகனத்திற்கு, கலத்திற்கு அல்லது இடத்திற்கு அடிக்கடி வந்து போகிறவருக்குப் பணத்தைக் கடனாக வழங்குகிற அல்லது பணம் கொடுக்கிற

எவராயினும்,

[1] [இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனையோடு, ஐயாயிரம் ரூபாய் வரை நீடிக்கலாகும் அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார்; ஆனால் மாறாகச் செய்வதற்கு நீதிமன்றத்தின் தீர்ப்பில் குறிப்பிடப்படவேண்டிய சிறப்பானவையும் போதியவையுமான காரணங்கள் இல்லாதிருக்கையில், –

1. சட்டம் எண் 18/1975 இன் 2 ஆவது பிரிவினால் பதிலாக அமைக்கப்பட்டது.

(i) முதற் குற்றம் ஒன்றிற்காக, அத்தகைய சிறைத் தண்டனையானது மூன்று மாதங்களுக்குக் குறையாததாக இருத்தல் வேண்டும்; மற்றும், அத்தகைய அபராதமானது ஐந்நூறு ரூபாய்க்குக் குறையாததாக இருத்தல் வேண்டும்;

(ii) இரண்டாவது குற்றம் ஒன்றிற்காக, அத்தகைய சிறைத்தண்டனையானது ஆறுமாதங்களுக்குக் குறையாததாக இருத்தல் வேண்டும்; மற்றும் அத்தகைய அபராதமானது எழுநூற்றைம்பது ரூபாய்க்குக் குறையாததாக இருத்தல் வேண்டும்; மேலும்

(iii) மூன்றாவது மற்றும் பிந்திய குற்றங்கள் ஒவ்வொன்றிற்கும் அத்தகைய சிறைத்தண்டனையானது ஒரு வருடத்திற்குக் குறையாததாக இருத்தல் வேண்டும்; மற்றும் அத்தகைய அபராதமானது ஆயிரம் ரூபாய்க்குக் குறையாததாக இருத்தல் வேண்டும்.]

(2). (1) ஆவது உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட வீடு, அறை, கூடாரம், அடைப்பு, வாகனம், கலம் அல்லது இடம் எதிலும், அந்த உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட பொருட்களில் எதன் மீதும் சூதாடுவதாக, அல்லது அத்தகைய பொருட்களில் எதன் மீதும் சூதாடும் பொருட்டு வந்திருப்பதாகக் காணப்படுகிற எவராயினும் ஒரு மாதம் வரை நீடிக்கலாகும் சிறைத் தண்டனையோ ஐந்நூறு ரூபாய் வரை நீடிக்கலாகும் அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார்.

அத்தகைய வீடு, அறை, கூடாரம், அடைப்பு, வாகனம், கலம் அல்லது இடம் எதிலும் (1) ஆவது உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட பொருட்களில் எதன்மீதும் சூதாட்டம் நடக்கும்போது அங்குக் காணப்படும் ஆள் எவரும், மாறானது மெய்ப்பிக்கப்படும் வரை, அத்தகைய பொருளின்மீது சூதாடும் பொருட்டு அங்கு இருந்திருக்கிறார் என்று அனுமானிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஏதாவது பொதுத் தெருவில் அல்லது பொது வழியில் அல்லது பொதுமக்கள் வந்துபோகக்கூடியதாயுள்ள அல்லது வந்துபோக அனுமதிக்கப்படுகிற ஏதாவது இடத்தில் (1) ஆவது உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட பொருட்களில் எதன் மீதும் சூதாடுவதாகக் காணப்படுகிற எவரொருவரும், மூன்று மாதகாலம் வரை நீடிக்கலாகும் சிறைத்தண்டனையோ முந்நூறு ரூபாய் வரை நீடிக்கலாகும் அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார்.

[1] [4(அ). குற்றத்தைப் பற்றிய அனுமானம்.— (1). 4 ஆவது பிரிவின் (1) ஆவது உட்பிரிவின்படித் தண்டிக்கத்தக்க குற்றம் ஒன்றிற்கான விசாரணை எதிலும்—

(i) பருத்தி அல்லது தங்கம், வெள்ளிக்கட்டி அல்லது வேறு பண்டத்தின் சந்தைவிலையைக் காட்டும் குறிப்பிட்ட இலக்கங்களைக் கொண்டிருக்கிற துண்டுச்சீட்டுகள், அல்லது

(ii) பருத்தி, தங்கம் அல்லது வெள்ளிக்கட்டி அல்லது வேறு பண்டத்தின் சந்தைவிலையின்மீது பணயம் வைத்தலுக்காக அல்லது பந்தயம் கட்டுவதற்காகப் பெறப்பட்ட அல்லது செலவழிக்கப்பட்ட பணத்துடன் சம்பந்தப்பட்டதாகத் தோன்றுகிற கணக்குகள், அல்லது

(iii) அத்தகைய விலை பற்றிய பிரசுரம் அடங்கியுள்ள செய்தித்தாள்கள்

வீடு, அறை, கூடாரம், அடைப்பு, வாகனம், கலம் அல்லது இடம் எதிலும் காணப்படுவதாக மெய்ப்பிக்கப்படுமிடத்து, மாறானது மெய்ப்பிக்கப்பட்டாலன்றி, அத்தகைய வீடு, அறை, கூடாரம், அடைப்பு, வாகனம், கலம் அல்லது இடம் 4 ஆவது பிரிவின் (1) ஆவது உட்பிரிவின் பொருளின்படி சூதாடும் பொருட்டுப் பயன்படுத்தப்படுகிறது என்று அனுமானிக்கப்படுதல் வேண்டும்.

(2). 4 ஆவது பிரிவின் (2) ஆவது உட்பிரிவின்படி அல்லது (3) ஆவது உட்பிரிவின்படி தண்டிக்கத்தக்க குற்றமொன்றிற்கான விசாரணை எதிலும், (1) ஆவது உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட பொருட்களில் எதையும் எதிரி தம் வசத்தில் வைத்திருப்பதாகக் காணப்பட்டார் என்று மெய்ப்பிக்கப்படுமிடத்து, மாறானது மெய்ப்பிக்கப்பட்டாலன்றி, 4 ஆவது பிரிவின் (2) ஆவது உட்பிரிவின் அல்லது, நிலவரத்திற்கேற்ப, (3) ஆவது உட்பிரிவின் பொருளின்படி, எதிரி சூதாடுகிற குற்றத்தைச் செய்திருக்கிறார் என்று அனுமானிக்கப்படுதல் வேண்டும்.]

[2][5. பொதுச் சூதாட்ட விடுதியில் நுழைவதற்குக் கட்டளை அளிக்க அதிகாரம்.— (1). [3] [இரண்டாவது வகுப்பு நீதித்துறை நடுவருக்குக் கீழ்நிலையில் இல்லாத நீதித்துறை நடுவர் எவரும்] அல்லது காவல் துணைக் கண்காணிப்பாளரின் நிலைக்குக் குறைந்தவராயில்லாத

1. சட்டம் எண் 18/1975 இன் 3 ஆவது பிரிவினால் புகுத்தப்பட்டது.

2. 1933 ஆம் ஆண்டு தமிழ்நாடு சூதாட்ட (திருத்தம்) சட்டத்தின் 2 ஆவது பிரிவினால் 5 ஆவது பிரிவு, 5(1) என்று மறு எண்ணிடப்பட்டு (2) ஆவது உட்பிரிவும் சேர்க்கப்பட்டது.

3. சட்டம் எண் 18/1975 இன் 4 ஆவது பிரிவினால் பதிலாக அமைக்கப்பட்டது.

காவல் அலுவலர் எவரும், எந்த இடமும் பொதுச் சூதாட்ட விடுதியாகப் பயன்படுத்தப்படுகிறது என்று நம்புவதற்குக் காரணம் கொண்டிருந்தால், அவர் இரவில் அல்லது பகலில் அத்தகைய இடம் எதிலும், அவசியமெனத் தோன்றலாகும் துணையுடன் நுழைந்து, அங்குக் காணப்படும் அனைவரையும் கைது செய்யவும், அங்குக் காணப்படும் சூதாட்டக் கருவிகள் அனைத்தையும், பணத்தையும், பணத்திற்கான காப்புறுதிப் பத்திரங்களையும் சூதாடும் பொருட்டுப் பயன்படுத்தப்பட்டிருப்பதாக அல்லது பயன்படுத்தக் கருதப்பட்டிருப்பதாக நியாயமாகச் சந்தேகிக்கப்பட்ட பெறுமானமுள்ள பொருட்களையும் கைப்பற்றவும் அத்தகைய இடத்தின் எல்லாப் பகுதிகளையும் அங்குக் காணப்படும் ஆட்களையும் கூட சோதனையிடவும், தமது கட்டளையின் மூலம் அவர் துணை ஆய்வாளரின் நிலைக்குக் குறைந்தவராயில்லாத காவல் அலுவலர் எவருக்கும் அதிகாரமளிக்கலாம்.

[1][(2). (1) ஆவது உட்பிரிவின்படி கட்டளை பிறப்பிப்பதற்கு அதிகாரம் கொண்டிருக்கிற காவல் அலுவலர் எவரும், அவ்வாறு செய்வதற்குப் பதிலாக, அத்தகைய சட்டளையின்படி செலுத்தத்தக்க அதிகாரங்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றில் எதையும் தாமே செலுத்தலாம்.]

6. முந்திய பிரிவின்படியான சோதனையில் கண்டுபிடிக்கப்பட்ட ஆட்டச்சீட்டுகள், பகடைக்காய்கள் முதலியவை அந்த இடம் ஒரு பொதுச்சூதாட்ட விடுதி என்பதற்கான சாட்சியமாக இருத்தல்.—முந்திய கடைசிப் பிரிவின் வகைமுறைகளின்படி நுழைந்த அல்லது சோதனையிட்ட இடம் எதிலும் அல்லது அங்குக் காணப்பட்ட ஆள் எவரிடமும் காணப்பட்ட ஆட்டச்சீட்டுகள், பகடைக்காய்கள், சூதாட்ட மேசை அல்லது துணி, பலகை அல்லது மற்றச் சூதாட்டக் கருவிகள் எவையும், காவல் அலுவலர் அல்லது அவரது உதவியாளர்களில் எவரும் ஆட்டம் எதுவும் நடப்பதை உள்ளபடியே பார்க்காவிட்டாலும் அந்த இடம் ஒரு பொதுச் சூதாட்ட விடுதியாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதற்கும் அங்குக் காணப்பட்ட ஆட்கள் சூதாடுவதற்காக வந்திருக்கின்றனர் என்பதற்கும் சாட்சியமாக இருக்கும்.

1. 1933 ஆம் ஆண்டு தமிழ்நாடு சூதாட்ட (திருத்தம்) சட்டத்தின் 2 ஆவது பிரிவினால் 5 ஆவது பிரிவு, 5(1) என்று மறு எண்ணிடப்பட்டு (2) ஆவது உட்பிரிவும் சேர்க்கப்பட்டது.

7. பணயப் பொருள் வைத்து ஆடியதாக மெய்ப்பிக்க வேண்டியது அவசியமில்லை.—எந்த ஆளையும் ஒரு பொதுச்சூதாட்ட விடுதியை வைத்திருப்பதற்காகவும் அல்லது ஏதேனும் பொதுச் சூதாட்ட விடுதியின் மேலாண்மையில் சம்பந்தப்பட்டிருப்பதற்காகவும் குற்றவாளி எனத் தீர்மானிக்கும் பொருட்டு, ஆட்டம் எதிலும் ஆடுவதாகக் காணப்பட்டவர் எவரும், பணத்திற்காக, பணயத்திற்காக, பந்தயத்திற்காக அல்லது பணயப் பொருளுக்காக ஆடினார் என்று மெய்ப்பிக்கவேண்டியது அவசியமில்லை.

8. பொதுச்சூதாட்ட விடுதியைத் திறந்து வைத்திருத்தல் முதலியவற்றிற்கான தண்டனை.—எந்தப் பொதுச்சூதாட்ட விடுதியையும் திறந்து வைத்திருக்கிற, வைத்து வருகிற அல்லது பயன்படுத்துகிற அல்லது பயன்படுத்த அனுமதிக்கிற அல்லது நடத்துகிற அல்லது ஏதேனும் பொதுச்சூதாட்ட விடுதித்தொழில் நடத்துவதற்குத் துணை புரிகிற அல்லது அங்கு சூதாடுவதற்காகப் பணத்தைக் கடனுகக் கொடுக்கிற அல்லது கொடுக்கிற எவரொருவரும், குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டதன் பேரில், ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படாத அபராதத்திற்கோ, மூன்று மாதத்திற்கு மேற்படாத சிறைத்தண்டனைக்கோ அல்லது இரண்டிற்குமோ ஆளாதல் வேண்டும்.

9. பொதுச்சூதாட்ட விடுதியில் சூதாடுவதாகக் காணப்படுவதற்குத் தண்டனை.—பொதுச்சூதாட்ட விடுதி ஒன்றில் சூதாடுவதாக அல்லது சூதாடும் பொருட்டு வந்திருப்பதாகக் காணப்படும் எவரும், குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டதன்பேரில், இருநூறு ரூபாய்க்கு மேற்படாத அபராதத்திற்கோ அல்லது ஒரு மாதத்திற்கு மேற்படாத சிறைத்தண்டனைக்கோ ஆளாதல் வேண்டும்; மேலும் பொதுச்சூதாட்ட விடுதி எதிலும், அதில் சூதாட்டம் அல்லது ஆட்டம் எதுவும் நடக்கும்போது காணப்படுகிற எவரும், மாறானது மெய்ப்பிக்கப்படும் வரை, சூதாடும் பொருட்டு அங்கு இருந்திருக்கிறார் என்று அனுமானிக்கப்படுதல் வேண்டும்.

10. தீர்ப்புத் தண்டனையின் பேரில், சூதாட்டக் கருவிகளை அழிக்கும்படிக் கட்டளையிடலாம்.—பொதுச் சூதாட்ட விடுதியை வைத்திருந்ததற்காக, சூதாடும் பொருட்டு அங்கு வந்திருந்ததற்காக, எவருக்கும் தீர்ப்புத் தண்டனை அளிக்கப்பட்டதன் பேரில்,

அங்குக் காணப்பட்ட சூதாட்டக் கருவிகள் அனைத்தும் [1][நீதித் துறை நடுவரின்] கட்டளை வாயிலாக அழிக்கப்படலாம், மேலும், அத்தகைய நடுவர், கைப்பற்றப்பட்ட வேறு பொருட்கள் எல்லா வற்றையும் அல்லது அவற்றில் எதனையும் அல்லது அவற்றிலி ருந்து கிடைக்கும் தொகையையும் தண்ட இழப்பாகும்படி கட்டளையிடலாம்.

11. திறமை விளையாட்டுகளுக்குக் காப்பு.—திறமை மட்டுமே சார்ந்த விளையாட்டுகள் எங்கெங்கு ஆடப்பட்டாலும் அவற்றின் மீது இந்தச் சட்டத்தின் 5 முதல் 10 வரையிலுள்ள பிரிவுகள் எதுவும் இயங்குவதாகக் கருதப்படுதல் ஆகாது.

[2] [11 (அ). (1) தகவல் கொடுத்தவர்களுக்கும் காவல் அலுவலர்களுக்கும் அபராதத்தின் பகுதியைக் கொடுத்தல்.—4, 8 அல்லது 9ஆவது பிரிவின் படி விதிக்கப்படும் அபராதத் தொகையில், மற்றும் கைப்பற்றப் பட்டு 10 ஆவது பிரிவின்படி தண்ட இழப்பாகுமென்று கட்டளை யிடப்பட்ட பணத்தில் அல்லது பொருட்களிலிருந்து கிடைக்கும் தொகையில், ஒரு பாதிக்கு மேற்படாத பகுதி எதனையும், குற்ற வாளியைக் கண்டுபிடிப்பதில் துணை புரிந்திருக்கலாகும் காவல் அலுவலர்களுக்கும் தகவல் கொடுத்தவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று [3] [நீதித்துறை நடுவர்] உத்தரவிடலாம்; இந்த உட்பிரிவின்படியான உத்தரவு ஒன்று மேல்முறையீட்டு, மேல் முடிவு அல்லது மேலாய்வு நீதிமன்றம் எதனாலும்கூட பிறப்பிக்கப் படலாம்.

(2). (1)ஆவது உட்பிரிவின்படி உத்தரவு ஒன்று பிறப்பிக்கப்பட்டிருக்குமிடத்து, சம்பந்தப்பட்ட [3] [நீதித்துறை நடுவரானவர்], அந்த உட்பிரிவின்படி கொடுக்கப்பட வேண்டிய தொகையை மாவட்டக்காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்புதல் வேண்டும்; அவரும் அதைத் தம்மால் தெரிந்தெடுக்கப்படலாகும் முன் சொல்லப்பட்ட தகவல் கொடுத்தவர்களுக்கும், காவல் அலுவலர்களுக்கும் தாம் பொருத்தமெனக் கருதும் விகிதங்களில் பகிர்ந்தளித்தல் வேண்டும்.

(3). (1)ஆவது உட்பிரிவின்படி உத்தரவிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் வரையில் அல்லது மேல்முறையீடொன்று அந்தக் காலத்திற்குள் தாக்கல் செய்யப்

1. சட்டம் எண் 18/1975 இன் 5ஆவது பிரிவினால் பதிலாக அமைக்கப்பட்டது.
2. 1950ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகர காவல் மற்றும் சூதாட்ட (திருத்தம்) சட்டத்தின் 3ஆவது பிரிவினால் இந்தப் பிரிவு பதிலாக அமைக்கப்பட்டது.
3. சட்டம் எண் 18/1975 இன் 6 ஆவது பிரிவினால் பதிலாக அமைக்கப்பட்டது.

பட்டிருந்தால், அந்த மேல்முறையீடு முடிவு செய்யப்படுகிற வரையில், முன்சொல்லப்பட்ட தொகையானது, மாவட்டக் காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பப்படுதல் ஆகாது.]

[1][11 ஆ. * * * * ]

*12.* பொதுத்தெரு முதலியவற்றில் சூதாடுவதற்குத் தண்டனை.—பொதுத் தெரு, இடம் அல்லது பொது வழி எதிலும் ஆட்டச் சீட்டுகள், பகடைக் காய்கள், எண்காட்டிகள், பணம் அல்லது வேறு சூதாட்டக் கருவிகளை வைத்து அல்லது பகிரங்கமாகச் சண்டையிடும் சேவல்களை வைத்து, சூதாடுவதாகக் காணப்படும் எவரொருவரும், குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டதன் பேரில், [2][நூறு ரூபாய்க்கு] மேற்படாத அபராதத்திற்கு அல்லது [2][மூன்று மாதங்களுக்கு] மேற்படாத சிறைத்தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்; மேலும், அத்தகைய சூதாட்டக் கருவிகளும் பணமும் தண்ட இழப்பாதல் வேண்டும்.

[3][*13.* இந்தச் சட்டத்தின்படியான குற்றங்கள் கைது செய்தற்குரிய குற்றங்களாகும்.—*1973* ஆம் ஆண்டு குற்ற விசாரணை முறைச் சட்டத்தில் (மத்தியச் சட்டம் 2/1974) என்ன அடங்கியிருந்த போதிலும், இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கத்தக்க குற்றங்கள் எல்லாம் கைது செய்தற்குரியவையாகும்.

*13* (அ). சாட்சிக்கு ஈட்டுறுதி அளித்தல்.—இந்தச் சட்டத்திற்கு மாறான வகையில், சூதாட்டத்தில் சம்பந்தப்பட்டுள்ளவரும் சூதாடுவது சம்பந்தமாக இந்தச் சட்டத்தின் வகைமுறைகளில் எதையும் மீறியதற்காக, எவரேனுமொருவரின் மீதான விசாரணையில் நீதித்துறை நடுவரின் முன்பு சாட்சியாக விசாரிக்கப் படுபவரும் மற்றும் அத்தகைய விசாரணையின் பேரில் எந்த விஷயங்களைப் பொறுத்து அவர் அவ்வாறு விசாரிக்கப்படுவாரோ, அந்த விஷயங்கள் எல்லாவற்றையும் தமது அறிவுக்கெட்டியவரை யில் உண்மையாகவும், நம்பிக்கையுடனும் வெளிப்படுத்துகிறவரும் மற்றும் அதன் பேரில், மேற்சொன்ன அந்த நடுவரிடமிருந்து அந்தப்படிக்கு எழுத்து மூலமான சான்றிதழ் ஒன்றைப் பெறுகிற வரும் ஆன எவரும், அத்தகைய சூதாட்டம் சம்பந்தமாக அந்தச்

---

1. 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகர காவல் மற்றும் சூதாட்ட (திருத்தம்) சட்டத்தின் 3 (i) பிரிவினால் விட்டுவிடப்பட்டது.
2. சட்டம் எண் 18/1975இன் 7 ஆவது பிரிவினால் பதிலாக அமைக்கப்பட்டது.
3. சட்டம் எண் 18/1975இன் 8 ஆவது பிரிவினால் பதிலாக அமைக்கப்பட்டது.

சமயத்திற்கு முன்பு செய்யப்பட்ட எதற்காகவும், இந்தச் சட்டத்தின்படியான குற்ற வழக்குத் தொடர்வுகள் எல்லாவற்றிலிருந்தும் விடுவிக்கப்படுதல் வேண்டும்.]

*14.* **நீக்கம்.**—*1889* ஆம் ஆண்டு நகரங்கள் தொல்லைகள் சட்டத்தின் (சட்டம் III/*1889*) *3* ஆவது பிரிவின் *10* ஆவது கூறும் கடைசிப் பத்தியும், *6* ஆவது *7* ஆவது மற்றும் *9* ஆவது பிரிவுகளும் இதன் மூலம் நீக்கப்படுகின்றன.